கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்
Coventry Tamil Welfare Association

http:// HYPERLINK http://www.tamils.org.uk
www.tamils.org.uk
Email: coventrytamils2002@gmail.com

தலைவர்:- உயர்திரு க.அரியரத்தினம். 07823535094

மார்கழி மாத இதழ்
NEWS BULLETIN
DECEMBER 2021
ஆக்கம்:- ஸ்ரீ.பகீரதன்

நாள்	நிகழ்வு
08/01/22 முதல்	புதிய கட்டடத் தொகுதியில் எமது தமிழ்ப் பாடசாலை மற்றும் கலைப் பாடங்கள் ஆரம்பம். பாடசாலையின் முகவரி: Clifford House, 38-44, Binley Road, Coventry CV3 1JA. 

அனைவருக்கும் இனிய நத்தார் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!



பிறக்க இருக்கும் புதிய ஆண்டில், கொரோனா, ஒமிக்ரோன் போன்ற கொடிய நோய்களிலிருந்து இந்த உலக மக்கள் அனைவருக்கும் விடுதலை கிடைக்கவேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனைக் கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம் பிரார்த்தித்துக் கொண்டு, உங்கள் அனைவருக்கும் நத்தார் மற்றும் புத்தாண்டு வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

காப்போம் தமிழ்!
இணைவோம் தமிழால்!

எமது மொழி, எமது அடையாளம்! எமது அடையாளமாகிய தமிழ்மொழியானது வளர்ந்து வருகின்ற எமது இளைய சமுதாயத்தினரிடமிருந்து, புலம்பெயர் தேசங்களில் மெல்லமெல்ல அழிந்து கொண்டிருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. எமது இளஞ்சமுதாயம் எமது தமிழ் மொழியின் பெருமையையும், அதன் சிறப்பினையும் தெரிந்து கொள்வதோடு, குடும்பத்தினருடனும், தமிழ் நண்பர்களுடனும் தமிழில் உரையாடுவதற்கும் வழிவகுக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பு எமதாகும்.



தமிழை எம் இளையோரிடம் கொண்டு சேர்ப்பதுடன் எமது மொழியின்பால் அவர்களுக்கு ஒரு ஈர்ப்பு ஏற்பட வேண்டும் என்ற நோக்கில், **"காப்போம் தமிழ்"** என்னும் அமைப்பினர் இளையோர் மத்தியில் பேச்சு, பாடல் மற்றும் நடனம் என்னும் துறைகளில், வயதுப் பிரிவுகளின் அடிப்படையில், தமிழ்த் திறன் போட்டிகளை நடாத்தி பெறுமதியான பரிசில்களை வழங்குவதோடு, அவர்களின் திறமைகளை வெளியே கொண்டுவந்து, அந்த வெற்றியாளர்களை நட்சத்திரங்களாக உருவாக்கி, அவர்களுக்கான அங்கீகாரத்தை, எமது சமூகத்தின் மத்தியில் ஏற்படுத்துவதன் மூலம் நிச்சயமாக அவர்களாகவே எமது மொழியை அழிவில் இருந்து மீட்டு காலங்காலமாய் எம் மொழியை வாழ வைப்பார்கள்.

காப்போம் தமிழ்! இணைவோம் தமிழால்!

எனவே தயவுசெய்து உங்கள் பிள்ளைகளையும் இந்தப் போட்டிகளில் பங்குபெறவைத்து, வெற்றி பெறச்செய்யுங்கள். விண்ணப்ப முடிவு திகதி **27/01/2022**. மேலதிக விபரங்களுக்கு இந்த இணைப்பை https://kaappomthamizh.com அழுத்துங்கள்.



தமிழ் மரபுத் திங்கள்

தை மாதத்தைத் 'தமிழ் மரபுத் திங்கள்' (Tamil Heritage Month) எனப் பிரகடனப்படுத்தும் பிரேரணை லண்டன் அஸெம்பிளி (லண்டன் பெருநகர அவை)க்கு வியாழக்கிழமை மார்கழி 2ஆம் திகதி "கன்ஸர்வேடிவ் அஸெம்பிளி" உறுப்பினர் நிக்கலஸ் றொஜர்ஸ் அவர்களால் முன்மொழியப்பட்டு, விவாதிக்கப்பட்டது. இதன்போது, அனைத்து உறுப்பினர்களும் அதற்கான ஆதரவினைத் தெரிவித்த பின்னர், தை மாதத்தைத் '**தமிழ் மரபுத் திங்கள்**' (Tamil Heritage Month) என பிரகடனப்படுத்தும் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது..

இதுபோலவே தமிழர்கள் அதிகமாக வாழும் கனடாவிலும் தைமாதம் தமிழ் மரபுத் திங்களாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளதாக இணையச் செய்திகளில் தெரிவிக்கப்படுகிறது.



கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத் தலைவரின் பிறந்தநாள் நிகழ்வும், தமிழ்ப் பாடசாலைக் கட்டடம் திறந்து வைப்பும்

கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் சிவத்தமிழ்க் காவலர் அரியரத்தினம் கந்தையா அவர்களின் அகவைநாளான 29/12/2021 அன்று தமிழ்ப் பாடசாலையின் புதிய கட்டடம் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. தற்போதைய சூழ்நிலை காரணமாக நிர்வாக உறுப்பினர்களும், ஆசிரியர்களும் மட்டுமே இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.



இதுவரை காலமும் இணைய வழியில் நடைபெற்ற எமது பாடசாலைக் கற்றல் செயற்பாடுகள், **08/01/2022** அன்றுமுதல் நேரடியாக ஆரம்பமாக இருக்கின்றன. அன்றையதினம் கொவன்றி நகரபிதாவும் அவரது பாரியாரும் வருகைதர இருப்பதோடு. பிரித்தானிய பரீட்சைச் சபையின் சான்றிதழ்களும் OFAAL சான்றிதழ்களும் எமது மாணவர்களுக்கு அவர்களால் வழங்கிக் கௌரவிக்கப்படும்.



